# பூநகரியில் அதிரடி: சிப்பாய் பலி; ஆயுதம் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பூநகரி உதவி அரச அதிபர் பணிமனைக் கட்டிடத்தில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் இராணுவ சிப்

(4-ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 28 இதழ் 30
யாழ்ப்பாணம் புதன்கிழமை 11 — 03 — 1992

## மூன்று தமிழர்கள் படையினரால் கொலை!

(திருமலை)

திருகோணமலை மல்லிகைத் தீவில் இராணுவத்தினரால் மூன்று தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மணலாற்றிலிருந்து திருமலை மல்லிகைத்தீவுக்கு கடந்த சனிக்கிழமை இரவு சென்று கொண்டிருந்த தமிழ்ப்பொது

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசின் தீர்மானப்படியே இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

அரசின் தீர்மானப்படியே தற்போதைய இராணுவ நடவடிக்கை இடம்பெறுகிறது.

அரசு உத்தரவிடும் பட்சத்தில் எவ்வேளையிலும் அதனை நிறுத்துவோம்.

இவ்வாறு வடபகுதி இராணுவ தளபதி ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்:

(4ம் பக்கம் பார்க்க)

### உள்ளே....

வடக்கு – கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர் சேவையின் 11–ம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதுதொடர்பான விபரங்கள் இன்றைய ஈழநாடுவின் உட்பக்கத்தில் வெளிவந்துள்ளன.

### தடைப்பட்டிருந்த பரீட்சையை நடத்தக்கோரி

# யாழ். நகரில் மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

(யாழ்ப்பாணம்)

**யாழ். பல்கலைக் கழக மாணவர் அவையினர் கடந்த வருடம் தடைப்பட்டிருந்த க. பொ. த (உயர்தர) பரீட்சையை நடத்துமாறு கோரி இன்று துவிச்சக்கர வண்டியில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றினை யாழ். நகரில் நடாத்தவுள்ளனர்.**

1991–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தடைப்பட்டிருந்த க. பொ. த (உயர்தர) பரீட்சையை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் திட்டமிட்டபடி நடைபெறும் என்பதனை காலக் கிரமத்தில் சிறிலங்கா அரசு உத்தியோக பூர்வமாக அறிவிக்கக்கோரி இப்பேரணியை நடத்தவுள்ளனர்.

பேரணியின் முடிவில் பொதுக்கூட்டம் நடைபெற்று இறுதியில் மாணவர்களது பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றும் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 9–00 மணிக்கு நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையினர் கேட்டுள்ளனர். (வி)

## கிறிஸ்தவ தூதுக்குழு இன்று யாழ். வரவுள்ளது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, கிறிஸ்தவத் தூதுக் குழு ஒன்று இன்று கொழும்பில் இருந்து யாழ். நகர் வரவுள்ளது.

வண. டாக்டர் றியான்சி பெரேரா (அங்கிலிக்கன்), வண. டாக்டர் போல் கஸ்பஸ் (கத்தோலிக்கத் திருச்சபை), திருமதி இவான் பேடினன்ஸ் (மெதடிஸ் திருச்சபை

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். தாக்குதல் குறித்து கொழும்பில் உயர் மாநாடு

(கொழும்பு)

யாழ். குடா மீதான இராணுவதாக்குதல் தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று நாளை கொழும்பிலுள்ள கூட்டுப்படைத் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதா? இல்லையா? என்பது குறித்து இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மாநாட்டில் அமைச்சர்கள் இராணுவத்தளபதிகள் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வி)

## புலிகளுக்கு தடை விதிப்பது குறித்து இந்தியா பரிசீலனை

(புதுடில்லி)

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடைவிதிப்பது குறித்து இந்திய மத்திய அரசு பரிசீலித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

ராஜ்ய சபாவில் நேற்று உறுப்பினர்களின் கேள்வி நேரத்தின் பின் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பிட்ட யோசனை மந்திரி சபையின் கவனத்திற்கு விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (க)

## 169 தமிழ் விவசாயிகள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பில் இராணுவத்தினருக்கு அஞ்சி பொலநறுவ மாவட்டத்தில் தஞ்சம் புகுந்து மன்னம்பிட்டி காட்டுப்பகுதியில் விவசாயம் செய்துவந்த 169 தமிழர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்,

கடந்த இரு மாதங்களாக இவர்கள் மன்னம்பிட்டிய காட்டுப்பகுதியைத் துப்பரவு செய்து மகாவலி கங்கை ஆற்றின் இரு மருங்கிலும் விவசாயம் செய்து வந்தனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் பொலநறுவ நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டனர். (சி)

## எதிர்க்கட்சிஎம்.பி கள் குழு மட்டு. நகருக்கு விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சி எம். பி. க்கள் குழுவொன்று எதிர்வரும் 14ம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளது.

மட்டக்களப்புபகுதியிலுள்ள அகதி முகாம்களை இவர்கள் பார்வையிடவுள்ளனர். இக் குழுவில் மட்டக்களப்பு மாவட்ட எம். பி. க்களும்,

(4-ம் பக்கம் பார்க்க)

### காங்கேசனிலிருந்து

## மீண்டும் 8 லொறிகளில் உணவு எடுத்துவரப்படும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்திலுள்ள உணவுப் பொருட்களை ஏற்றுவதற்காக இன்று காலை 8 லொறிகள் மீண்டும் செல்லுகின்றன.

காங்கேசன்துறையிலிருந்து கொண்டுவரும் உணவுப் பொருட்களை சேமித்து வைப்பதற்கு தற்காலிகமாக பல இடங்களை ஏற்பாடு செய்துள்ளமையால் உணவுப் பொருட்களை ஏற்றும்பணி தொடர்ந்து நடைபெறுமென்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு தொடர்பில்லை

(யாழ்ப்பாணம்)

''நாடாளுமன்றத் தெரிவுக் குழுமுன் டாக்டர் ச. சிவகுமாரினால் சமர்ப்பிக்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

## முகமூடி முன் நிறுத்தப்பட்டு விசேட அட்டை விநியோகம்

(திருமலை)

திருகோணமலை நகரில் வசிக்கும் அனைவருக்கும் முகமூடி அணிந்த தலையாட்டிகள் முன் நிறுத்தப்பட்டபின் இராணுவத்தினரால் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

கடந்த வாரம் நூற்றுக்கு மதிகமான திருமலைவாசிகளுக்கு இவ்வாறு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

முகமூடி முன் நிறுத்தப்படுபவர்களில் தலையாட்டப்படுபவர்கள் இராணுவத்தால் தடுத்து வைக்கப்படும் நடவடிக்கைகளும் இப்பகுதியில் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது. (மா)

## தெரிவுக் குழு இறுதி அறிக்கை ஏப்பிரலில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

இனப்பிரச்னைக்குதீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவிக்குழு ஏப்பிரல் மாதத்தில் தனது இறுதி அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறது.

தற்போது தெரிவுக்குழு முன்பாக நடைபெற்றுவரும் வாய்மூல வாக்குமூலங்கள் வெகுவிரைவில் முடிவடையவிருக்கிறது. இதனையடுத்து நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒரு இறுதி அறிக்கையை தயாரிக்கவிருக்கிறது. இந்த நாடாளுமன்ற தெரிவுக்குவின் முன்பாக அரசியற்கட்சிகள், மத

(4–ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் செயலகம் கிராம உத்தியோகத்தர் சேவையின் 11ம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை 1992

கிராம உத்தியோகத்தர் சேவையின் 11-ம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளுக்கு இணங்க, வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்களை நியமிக்கும் பொருட்டுப் பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு, வடக்கு-கிழக்கு மாகாண பிரதமசெயலாளரினல் கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையில் தகைமைகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுக்கிடையில் திறமை அடிப்படையில் தகைமைகளை உடையவர்களை இன விகிதாசாரத்துக்கு இணங்கத் தேர்ந்தெடுத்து, அத்தகைய வெற்றிடங்கள் நிரப்பப்படும். வெற்றிடமொன்றின் பொருட்டு சம தகைமைகளைக் கொண்ட இரண்டு விண்ணப்பதாரர்கள் அல்லது அதற்கு மேலதிகமானோர் இருக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எடுப்பார்.

கிராம உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சை மூன்று (03) வினத்தாள்களைக் கொண்டிருக்கும். அவை கீழ்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

| வினாத்தாள் | நேரம் |
|---|---|
| 1. மொழி ஆற்றல் | 1 மணி |
| 2. பொது அறிவு | 1 மணி |
| 3. விவசாய அறிவு (பாடத்துடன் தொடர்புடையது) | 1 மணி |

பாடத் திட்டம்

(அ) மொழி ஆற்றல் - பிழையற்ற முறையில் மொழியைக் கையாளும் திறமை. கருத்துக்களை வெளியிடுதல், அவற்றைப் புரிந்துகொள்ளுதல், இத் துறையில் கடிதங்களைப் பரிமாறிக்கொள்ளும் திறமை. முறைபாடுகளை அறிக்கைப்படுத்தல் போன்ற விடயங்களை அடக்கிய 01 மணித்தியால வினாத்தாள்.

(ஆ) பொது அறிவு: தேசிய சர்வதேச விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் அறிவையும், தேசிய, பொருளாதார, சமூக, வரலாற்று ரீதியிலான கலாச்சாரங்கள் தொடர்பான அறிவை அளிக்கும் பொருட்டான 01 மணித்தியால வினாத்தாள்.

(இ) விவசாய அறிவு: [1] விவசாய கோட்பாடுகளும் பயிர்ச் செய்கையும். [2] ★ நெற் பயிர்ச்செய்கை - விதைகளை இனங்காணுதல், ஏற்படும் நோய்கள், நோய்களைத் தடுப்பதற்கான முறைகள், புதிய தொழில்நுட்ப பயிர்ச்செய்கை முறைகள். ★ மாட்டுப் பண்ணைகள் பால் எடுக்கும் பொருட்டு-பசுக்களை இனங்காணுதல், நோய்களைத் தடுக்கும் முறைகள், பால், இறைச்சி உற்பத்திகளை சந்தைப்படுத்தல். ★ கோழி வளர்ப்பு; கோழி வளர்ப்புக்கு தேவைப்படும் தொழில்நுட்ப அறிவு, உணவுகளைத் தயார் செய்தல், நோய்கள், நோய்களைத் தடுத்தல், ★ தேனீகள் வளர்ப்பு; தேனிப் பெட்டிகளைத் தயார் செய்தல், புதிய தொழில்நுட்ப அறிவு, ★ வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை; தகுந்த வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைகளை இனங்காணுதல் - நீர் வழங்குதல். [3] பயிர்களைப் பல்வகைப்படுத்தல் தொடர்பாக அடிப்படை அறிவுடன் தொடர்புடைய விடயங்கள். [4] மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பாக ஆரம்ப செய்முறை அறிவு - மீன்களின் இனப்பெருக்கம், மீன்பிடித்தல், மீன் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான தொழில்நுட்ப அறிவு. ★ விவசாயத்தின் பொருட்டு உபயோகித்துக்கொள்ளக் கூடிய தாபனமுறைகள் தொடர்பாகப் பயிலுதல். ★ உதவி மானியங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு எடுக்கவேண்டிய நடவடிக்கை.

பரீட்சை;- மாவட்டத் தலைநகரங்களில் உள்ள நிலயத்தில் மாத்திரமே நடாத்தப்படும்.

## 03:. விண்ணப்பிக்கும் பொருட்டு அபேட்சகர்கள் கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1, வயதெல்லை

விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும், 40 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க நிரந்தர பதவிகளை வகிப்பவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

11. (அ) கல்வித் தகைமைகளும் மற்றைய தகைமைகளும்.

1. சிங்களம், தமிழ் மொழிகள் உட்பட எண்கணிதம், வர்த்தக எண்கணிதம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

2. சிங்களம் அல்லது தமிழ் மொழி, எண்கணிதம், வர்த்தக எண்கணிதம், ஆரம்ப கணிதம் தூய கணிதம் என்னும் பாடங்களில் சித்திகளுடன் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண) ப் பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

3. மொழி, கணிதம் உட்பட குறைந்த பட்சம் 'பி' தரத்தில் இரண்டு சித்திகளுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் 6பாடங்களில் தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைதல்.

குறிப்பு: மேல் பந்தி 3 இன் கீழ் க. பொ. த. (சா. த.) ஏதேனும் பாடமொன்றின் பொருட்டு சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருக்கையில் க. பொ. த.) உ. தரத்தில்) அப்பாடங்களின் பொருட்டு சாதாரண சித்தி பெற்றிருந்தால் அத்தகைய பாடங்கள் சாதாரண தரத்தில் திறமைச் சித்திகளாகக் கருதப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள்

1. இலங்கைப் பிரஜையாய் இருத்தல் வேண்டும்.
2. நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
3. கிராம உத்தியோகத்தரொருவருக்கான கடமைகள் மேற்கொள்ளக்கூடிய விதத்தில் சிறந்த உடல் நலம் கொண்டவராக விளங்குதல் வேண்டும்.

(இ) 1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்புள்ள நெருங்கிய 6 ஆண்டுகளுக்குள் அபேட்சகர் தாம் நியமனம் கோரும் பி/செ உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொடர்ந்து 3ஆண்டுகள் வசித்து வந்தார் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ்வரும் சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைத்தல் வேண்டும்.

* வாக்காளர் பெயர்ப்பட்டியலில் இருந்து பெற்றுக்கொண்ட பொழிப்பு;
* பி/செயலாளரினல் உறுதி செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்சான்றிதழொன்று.

2. அபேட்சகர் வெற்றிடமுள்ள நிர்வாக மாவட்டத்தினுள் பிறந்தவராக அல்லது நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருக்கும் பட்சத்தில் பெற்றோர்கள் காலத்துக்குக்காலம் இடமாற்றம் பெற்றுச் செல்வதனுல் தமது வதிவிடம் தொடர்பாக தகவல்களை உறுதிப்படுத்த முடியாத இடமாற்றங்களைக் கொண்ட சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் அபேட்சகர்களாகத் தோற்றும்போது, அப்பிள்ளைகளின் நிரந்தர வதிவிடமாக தாயின் அல்லது தந்தையின் பிறந்த இடத்தை நிரந்தர வதிவிடமாகக் கருதல் வேண்டும்.

## 04 ஆட்சேர்ப்புக்கள் கிராம உத்தியோகத்தர் சேவையின் IIம் தரத்திற்கே மேற்கொள்ளப்படும்.

1. இக்கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு உப-அட்டவணையின் இல. 1இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களைக் கொண்டுள்ள பி. செ/உ. அ. அதிபர் பிரிவுகளில் வசிப்பவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

11. கிராம உத்தியோகத்தர்களாகத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க, குறிப்பிட்ட பி. செ. உ. அ. அதிபர் பிரிவுகளில் வதியும் உச்சப் புள்ளிகளைப் பெற்றுள்ள குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவர்களே தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கும் பொருட்டு, தகைமையைப் பெறுவதற்குக் குறிப்பிட்ட பாடங்களில் 40 புள்ளிகள் வீதம் பெறுதல் வேண்டும்.

## 05. விண்ணப்பங்கள் அனுப்பும் முறை

இவ்விண்ணப்பத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்கத் தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1992ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் கீழ்வரும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபரின் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை அச்சிட்டு அல்லது தட்டெழுத்து இயந்திரத்தில் பொறித்து அல்லது கையால் எழுதித் தயார் செய்து முடிந்த போதிலும் அதனைத் தமது கையெழுத்தின் மூலமே பூரணப்படுத்துதல் வேண்டும்,

விண்ணப்பங்கள் இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கிராம உத்தியோகத்தர் சேவை 11வது தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 1992'' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

முகவரி:

1. மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
2. மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.
3. மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு.
4. மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், வவுனியா.
5. மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபர். மாவட்டச் செயலகம், மன்னர்.
6. மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், திருகோணமலை.
7. மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு.
8. மாவட்ட ஆணையாளர்/அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், அம்பாறை.

விண்ணப்பங்களுடன் காசுக்கட்டளைகள் தவிர்ந்த, எந்தவொரு ஆவணங்களையும் அனுப்புதல் கூடாது என்பதுடன், நேர்முகப் பரீட்சையின்போது முன்னளிப்பதற்கு கீழ்வரும் சான்றிதழ்களைத் தயார்படுத்திக்கொள்ளல்வேண்டும்.

1. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
2. பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் புகைப்படப்பிரதி.
3. கல்விச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதி.
4. அண்மையில் பெற்றுள்ள குணநலச் சான்றிதழ்கள் இரண்டு.

## 06. பரீட்சைக் கட்டணங்கள்:

தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடிய விதத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சபைப் பிரதம செயலாளரின் பதவிப்பெயருக்குப் பெற்றுக்கொண்ட காசுக்கட்டளையை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். அதை வீண்ணப்பத்துடன் ஒட்டுதல் கூடாது. ரூபா. 75/-க்கான காசுக்கட்டளையை அனுப்புதல் வேண்டும்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக்க கொண்டும் மறுபடி செலுத்தப்படாது என்பதுடன், பரீட்சைக்கு மாற்றவும் இயலாது.

07. விண்ணப்பங்களைப் பிழையான முறையில் மற்ற முறையில் தயார்செய்து அனுப்புவதால் பாதகமான விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பாவார்கள். பூரணமற்ற முறையற்ற,விண்ணப்பங்க கரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப் கள் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத் பித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழ்வரும் ஆவ மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பதிவுஅடையாள அட்டை.
2. தபால் அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.
3. செல்லுபடியான கடவுச்சீட்டு.

எல்லாப்பரீட்சார்த்திகளும் அரசாங்க வர்த்த பிரசுரிக்கப்பட்ட பரீட்சைச் சட்ட திட்டங்களைத் திருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றைப் பின் லும் வேண்டும்.

கிராம உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு, துள்ள விண்ணப்பங்கள் எழுத்து மூலம் பரீட்சைக்கு அல்லது பின்போ நிராகரிக்கும் அதிகாரம் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு உரித்தாகும்.

விண்ணப்பதாரர்கள் கையொப்பத்தை பாடசா பர், சட்டத்தரணி, சமாதான நீதவான், பிரசித்த தாரிசு, படைத்தளபதி சேவைகளின் ஆணைபெற்ற யோகத்தர்கள் பெயரில் பிரிவில் அரசாங்க வர்த் மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி அல்லது ஆண்டொ 25,200/-க்குக் குறையாத இணைந்த சம்பளத்தைப் அரசாங்க சேவை நிரந்தர பதவியொன்றை வகிப் உறுதி செய்ய முடியும்.

## 08. பதவிக்கான சம்பள அளவுத்திட்டம்:

வருடாந்தம் 19,680 - 9X480 - 8X600 - 2 ஆகும். ரூபா. 25,200/-க்கு முன்னர்வினைத்திறன் தடைப்பரீட்சை உண்டு. பயிற்சிக்காலத்தில் 250-க்கான கொடுப்பனவொன்று செலுத்தப்படும்.

## 09 சேவை நியந்தனைகள்:

பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது. அனைதைச் சிறார்கள் நிதியத்துக்கு உதவித்தொகைகள் தப்படல் வேண்டும். 03 மாதப் பயிற்சிக் காலத்தைக் டிருக்கும்.

**சொ. கணேசநாத**
பிரதம செயல
வடக்கு-கிழக்கு மாகாண
பிரதம செயலாளரின் செய
திருகோண

திகதி: 1992 - 02 - 24
திருகோணமலை.

### அட்டவணை

கிராம உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக பிரதேசச் செயலாளர் / உ. அ. அதிபர்களின் பெயர் யல் மாவட்ட இலக்கத்துடனும், பிரதேச இலக்கத்து

**அம்பாறை மாவட்டம் — இல. 18**
**பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு**
**பெயரும் இலக்கமும்**

| | |
|---|---|
| அட்டாளைச்சேனை | — |
| ஆலையடிவேம்பு | — |
| அக்கரைப்பற்று | — |
| அம்பாறை | — |
| தமணை | — |
| கல்முனை (முஸ்லிம்) | — |
| கல்முனை (தமிழ்) | — |
| காரைதீவு | — |
| லகுகல | — |
| நிந்தாவூர் | — |
| பொத்துவில் | — |
| திருக்கோவில் | — |
| உகணை | — |

**மட்டக்களப்பு மாவட்டம் — இல. 19**
**பிரதேசச் செயலாளர் / உ. அ. அ பிரிவு**
**பெயரும் இலக்கமும்**

| | |
|---|---|
| ஏறாவூர்பற்று | — |
| காத்தான்குடி | — |
| கோறளைப்பற்று | — |
| கோறளைப்பற்று வடக்கு | — |
| மண்முனை | — |
| மண்முனை வடக்கு | — |

### அட்டவணை இல. 01

வெற்றிடமாகவுள்ள பகுதிச் செயலாளர்/மேலதிக சாங்க அதிபர் பிரிவுகளின் பெயர்ப்பட்டியல் மாவட்ட கத்துடனும் பிரிவு இலக்கத்துடனும்

| மாவட்டம் | மாவட்ட இல | பிரிவு | |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | 01 | — |
| கம்பஹ | 02 | 31 | — |
| களுத்துறை | 03 | 61 | — |
| காலி | 04 | 91 | — |
| மாத்தறை | 05 | 121 | — |
| ஹம்பாந்தோட்டை | 06 | 151 | — |
| மொனருகலை | 07 | 181 | — |
| பதுளை | 08 | 211 | — |
| கேகாலை | 09 | 241 | — |
| இரத்தினபுர | 10 | 271 | — |
| மாத்தளை | 11 | 301 | — |
| கண்டி | 12 | 331 | — |
| நுவரெலியா | 13 | 361 | — |
| அநுராதபுர | 14 | 391 | — |
| பொலன்னறுவ | 15 | 421 | — |
| குருநாகல | 16 | 451 | — |
| புத்தளம் | 17 | 481 | — |

...ட்டணம் எக்காரணம்
... என்பதுடன், வேறு

... முறையில் பூரண
...ப்புவதால் ஏற்படும்
...தாரர்களே பொறுப்
..., விண்ணப்பங்கள் நிரா
...யும் விண்ணப்பதாரர்
... அடையாளத்தை நிரு
... கீழ்வரும் ஆவணங்கள்

... வழங்கப்பட்ட ஆட்

...ட்ட அடையாள

...சாங்க வர்த்தமானியில்
... திட்டங்களைத் தெரிந்
...வற்றைப் பின்பற்றுத

... பொருட்டு, கிடைத்
... பரீட்சைக்கு முன்போ
...ாரம் வடக்கு-கிழக்கு
...த்தாகும்.

...ந்தை பாடசாலை அதி
...ன், பிரசித்த நொத்
... ஆணைபெற்ற உத்தி
...அரசாங்க வர்த்தமானி
...லது ஆண்டொன்றுக்கு
...சம்பளத்தைப் பெறும்
...ான்றை வகிப்பவரால்

...திட்டம்:
... - 8X600 - 28,800/-
...ளர்வினைத்திறமைகாண்
...சிக்காலத்தில் மாதம்
...சலுத்தப்படும்.

...பமுடையது. விதவை,
...வித்தொகைகள்செலுத்
...க் காலத்தைக் கொண்

...ணசநாதன்,
...பிரதம செயலாளர்,
...க்கு மாகாணசபை,
...லாளரின் செயலகம்,
திருகோணமலை.

... வெற்றிடமாக உள்ள
...களின் பெயர்ப்பட்டி
...தேச இலக்கத்துடனும்.

...பிரிவு

| | | |
|---|---|---|
| | — | 511 |
| | — | 512 |
| | — | 513 |
| | — | 514 |
| | — | 515 |
| | — | 517 |
| | — | 518 |
| | — | 519 |
| | — | 520 |
| | — | 522 |
| | — | 524 |
| | — | 526 |
| | — | 527 |

...பிரிவு

| | | |
|---|---|---|
| | — | 541 |
| | — | 542 |
| | — | 543 |
| | — | 544 |
| | — | 545 |
| | — | 546 |

...01
...லாளர்/மேலதிக அர
...டியல் மாவட்ட இலக்
...த்துடனும்

| பிரிவு | | இல |
|---|---|---|
| 01 | — | 30 |
| 31 | — | 60 |
| 61 | — | 90 |
| 91 | — | 120 |
| 121 | — | 150 |
| 151 | — | 180 |
| 181 | — | 210 |
| 211 | — | 240 |
| 241 | — | 270 |
| 271 | — | 300 |
| 301 | — | 330 |
| 331 | — | 360 |
| 361 | — | 390 |
| 391 | — | 420 |
| 421 | — | 450 |
| 451 | — | 480 |
| 481 | — | 510 |

| | | | | |
|---|---|---|---|---|
| அம்பாறை | 18 | 511 | — | 540 |
| மட்டக்களப்பு | 19 | 541 | — | 570 |
| முல்லைத்தீவு | 20 | 571 | — | 600 |
| மன்னார் | 21 | 601 | — | 630 |
| யாழ்ப்பாணம் | 22 | 631 | — | 660 |
| திருகோணமலை | 23 | 661 | — | 690 |
| கிளிநொச்சி | 24 | 691 | — | 720 |
| வவுனியா | 25 | 721 | — | 750 |

| | | |
|---|---|---|
| மண்முனை தென் எருவில்பற்று | — | 547 |
| மண்முனை தென்மேற்கு | — | 548 |
| மண்முனை மேற்கு | — | 549 |
| போரதீவுப்பற்று | — | 550 |

**முல்லைத்தீவு மாவட்டம் — இல. 20**
**பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு**
**பெயரும் இலக்கமும்**

| | | |
|---|---|---|
| மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்) | — | 571 |
| கரைதுறைபற்று (முல்லைத்தீவு) | — | 572 |
| ஒட்டிசுட்டான் | — | 573 |
| புதுக்குடியிருப்பு | — | 574 |
| துணுக்காய் | — | 575 |

**மன்னார் மாவட்டம் இல. 21**
**பிரதேசச் செயலாளர் / உ. அ. அ பிரிவு**
**பெயரும் இலக்கமும்**

| | | |
|---|---|---|
| மடு | — | 601 |
| மன்னார் | — | 602 |
| மாந்தை மேற்கு | — | 603 |
| முசலி | — | 604 |
| நானாட்டான் | — | 605 |

**யாழ்ப்பாண மாவட்டம் — இல. 22**
**பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு**
**பெயரும் இலக்கமும்**

| | | |
|---|---|---|
| நெடுந்தீவு | — | 631 |
| தீவுப்பற்று வடக்கு | — | 632 |
| தீவுப்பற்று தெற்கு | — | 633 |
| யாழ்ப்பாணம் | — | 634 |
| நல்லூர் | — | 635 |
| தென்மராட்சி | — | 636 |
| வடமராட்சி கிழக்கு | — | 637 |
| வடமராட்சி வடக்கு | — | 638 |
| வடமராட்சி தெற்கு — மேற்கு | — | 639 |
| வலிகாமம் கிழக்கு | — | 640 |
| வலிகாமம் வடக்கு | — | 641 |
| வலிகாமம் தெற்கு | — | 642 |
| வலிகாமம் தென்மேற்கு | — | 643 |
| வலிகாமம் மேற்கு | — | 644 |

**திருகோணமலை மாவட்டம் — இல. 23**
**பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு**
**பெயரும் இலக்கமும்**

| | | |
|---|---|---|
| ஈச்சிலம்பத்தை (வெருகல்) | — | 661 |
| கோமரங்கடவல | — | 662 |
| கந்தளாய் | — | 663 |
| கிண்ணியா | — | 664 |
| குச்சவெளி | — | 665 |
| மொறவேவா | — | 666 |
| மூதூர் | — | 667 |
| பதவிசிறிபுர | — | 668 |
| சேருவில | — | 669 |
| தம்பலகாமம் | — | 670 |
| திருகோணமலை பட்டினமும் சூழலும் | — | 671 |

**கிளிநொச்சி மாவட்டம் — இல. 24**
**பிரதேசச் செயலாளர் / உ. அ. அ பிரிவு**
**பெயரும் இலக்கமும்**

| | | |
|---|---|---|
| கரைச்சி | — | 691 |
| கண்டாவளை | — | 692 |
| பளை | — | 693 |
| பூநகரி | — | 694 |

**வவுனியா மாவட்டம் — இல. 25**
**பிரதேசச் செயலாளர் / உ. அ. அ. பிரிவு**
**பெயரும் இலக்கமும்**

| | | |
|---|---|---|
| வவுனியா வடக்கு | — | 721 |
| வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு | — | 722 |
| வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு | — | 723 |
| வெங்கலச்செட்டிகுளம் | — | 724 |

**விசேட குறிப்பு:**

யாழ்ப்பாண மாவட்ட ஆணையர்/அரசாங்க அதிபரினால் கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களும் தற்சமயம் ஆட்சேர்ப்பு நிபந்தனைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், விண்ணப்ப மாதிரிப் படிவத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், புதிய நிபந்தனைகளுக்கமைய, குறிப்பிட்ட திகதிக்குள் மீண்டும் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். விண்ணப்பக் கட்டணம் புதிதாகச் செலுத்தவேண்டியதில்லை. ஆனால் முன்னர் பணம் செலுத்திய விபரம், விண்ணப்பம் அனுப்பிய பதிவுத்தபால், பற்றுச்சீட்டு விபரம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

---

1. அளவு ஏ—4 (21-29 சென்றிமீற்றர்)
2. பக்கம் 1 பக்கம் 2

## வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கிராம உத்தியோகத்தர் சேவை பிரிவு II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை — 1992

வழங்கப்பட்ட கூட்டினுள் உரிய குறியீட்டு எழுத்தை/இலக்கத்தை இடவும்.

மாவட்டம்... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... மாவட்ட இல: ☐

விண்ணப்பிக்கும் பிரதேசச் செயலாளர்/உ. அ. அதிபர் பிரிவு:
... ... ... ... ... ... ... ... ... ... ... பிரிவு இல: ☐

(தயவு செய்து அட்டவணையைப் பார்க்கவும்)

01. விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடன் பெயர்: ... ... ... ... ... ... ...
ஆங்கிலத்தில்: ... ... ... ... ... ... ... ... ...
முழுப்பெயர்:-
ஆங்கிலத்தில்:... ... ... ... ... ... ... ... ...
சிங்களம் / தமிழ்: ... ... ... ... ... ... ... ... ...

02. முகவரி:-
ஆங்கிலத்தில்:... ... ... ... ... ... ... ... ...
சிங்களம் / தமிழ்:... ... ... ... ... ... ... ... ...

03. பால்:- ஆண் — 1 பெண் — 2 ☐

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:- சிங்களம் - S
தமிழ் - T
ஆங்கிலம் - E ☐

(இதனைப் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

05. நீங்கள் இலங்கை பிரஜையா என்பதை :- பரம்பரையாக - 1
பதிவு செய்வதன் மூலம் - 2 ☐

06. இனம்:-
சிங்களம் - 1 இலங்கைத் தமிழ் - 2
முஸ்லீம் - 3 இந்தியத் தமிழ் - 4
மலாய் - 5 வேறு - 6 ☐

07. பிறந்த திகதி:-
வருடம்: .................... மாதம்: .................... திகதி: ....................

(இ) பரீட்சைக் கட்டணம் ரூபா ..................../- செலுத்தப்பட்டுள்ளது.
காசுக்கட்டளை இலக்கம்: ....................
வழங்கிய தபால் அலுவலகம்.................... ....................

திகதி:.......... ....................
....................

(ஈ) நான் இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு உடன்படுகின்றேன்.

....................
திகதி:.......... .................... விண்ணப்பதாரரின் கையொப்பம்

14. விண்ணப்பதாரர் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
இவ்விண்ணப்பத்தை முன்னளித்த திரு/திருமதி:....................
என்பவர் எனக்கு நன்கு பரிட்சயமானவர் எனவும், அவர் 199......—......ந் திகதி என் முன்னிலையில் தனது கையெழுத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்: ....................
பதவி: ....................
முகவரி: ....................
திகதி: ....................

குறிப்பு: பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழற்றியெடுக்கக்கூடிய விதத்தில் விண்ணப்பத்துடன் குண்டூசியொன்றினால் இணைக்கவும்.

(A 1977)


## விரி விளம்பரம்

**முடக்கொத்தான் குளிகை**

முடக்கொத்தான் இலையில் இருந்து தயாரித்த Wilpenela Capsules கிடைக்குமிடம் எஸ். ரி.எம். மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5992)

**விண்ணப்பப் படிவம்**

கிராம உத்தியோகத்தர் சேவையின் IIம் தரத்திற்கான ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான படிவம் விற்பனையாகிறது. முழு விபரமும் எமது ஸ்தாபனத்திலும் எல்லாப் புத்தகக்கடைகளிலும் பார்வையிடலாம். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

(சி-6052)


## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி சேதுகாவலர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 13-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 1.30 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக திரு. இ. கணேசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், கௌரவ விருந்தினர்ராக திரு. நா. சத்தியநாதன் (கொத்தணி அதிபர்), சிறப்புவிருந்தினராக திரு. இ. வேல... (முன்னாள்அதிபர்) கலந்துகொள்வார்கள்.

## இராசி பலன்

11·03 1992
புதன்கிழமை
(தமிழுக்கு மாசி 29)

ஸப்தமி மாலை 5-32 வரை, ரோகிணி மு. இ. 9-01 வரை. சித்தயோகம் இராகுகாலம் பகல் 12-23 முதல் 1-53வரை, சுபநேரம் மாலை 4-53 முதல் 6-23 வரை.

மேடம்: காரிய பகை, எதிரியால் துன்பம், ஆயாசம்.

இடபம்: மகிழ்ச்சி தரும் செய்தி, உறவினர் வருகை, பணவரவு.

மிதுனம்: தொழில் கஷ்டம் அலைச்சல், வெறுப்பு.

கடகம்: விருந்துக்கு அழைப்பு, காரிய சித்தி, மகிழ்ச்சி.

சிங்கம்: புத்திரர் மகிழ்ச்சி, தொழில் லாபம், வாக்கு வன்மை.

கன்னி: உற்சாக உறவு, தனவிரயம், யோசனை.

துலாம்: தொழில் அச்சம், நெடும் பயணம், அலைச்சல்.

விருச்சிகம்: புதிய உறவு, குடும்ப மகிழ்ச்சி, பொது நலம்.

தனுசு: காரிய அனுகூலம், சுபவார்த்தை, நண்பர் உதவி.

மகரம்: ஸ்திரிபகை, அவசர போக்கு, தயக்கம்.

கும்பம்: கௌரவக்கு றைவு, உடல் உபாதை, சஞ்சலம்.

மீனம்: கீர்த்தி, தொழில் விருத்தி, சுபகாரியம்.

- ஜோஸ்யர்

## தவக்கால நற்சிந்தனை

ஆண்டவர் கூறுகிறார், இப்பொழுதாவது உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பிவாருங்கள்; ஏனெனில் நாம் அருளும் இரக்கமும் உள்ளவர்.

(யோவேல் 2 : 12 - 13)

நாம் உண்மையான மனமாற்றம் பெறுவதையே இறைவன் இன்று விரும்புகின்றார். எம்மில் பரிவன்பு மிக்கவர். எனவே எமது நெறி தவறிய வாழ்வில் இருந்து புத்துயிர் பெறுவோம்.

மோ. தார்சீசியஸ்

# உலக கிண்ண கிரிக்கெட் இந்தியா, சிம்பாவே தோல்வி

(மெல்போன்)

உலகக் கிண்ண கிரிகெட் போட்டியின் நேற்றைய போட்டிகளில் மேற்கிந்தியாவும், தென்ஆபிரிக்காவும் வெற்றி பெற்றன.

மே. இந்தியாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான போட்டியில் முதலில் ஆடிய இந்தியா 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது. (அஸாருதீன்-61, ஸ்ரீகாந்-40)

மே. இந்தியா 4[illegible].3 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 1[illegible]3 ஓட்டங்களை பெற்றது (ஆதற்றன் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்கள்)

தெ.ஆபிரிக்காவுக்கும் சிம்பாப்வேக்குமிடையிலான போட்டியில் தெ. ஆபிரிக்கா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஸ்கோர் விபரம்: சிம்பாப்வே 48.3 ஓவர்களில் 163 ஓட்டம், தெ. ஆபிரிக்கா 45.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டம். (சி)

## விசர் நாய் கடித்து மரணம்

(யாழ்ப்பாணம்)

விசர் நாய்க்கடிக்குள்ளாகிய ஒருவர் யாழ். பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூன்று நாளின் பின்னர் நேற்று முன்தினம் மரணமானார்.

பருத்தித்துறை சுடற்கரை வீதியைச் சேர்ந்த ஜோன்ஜ் துரைராஜா (54 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

## சுதந்திரக் கட்சி மத்திய குழு கூட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு மீண்டும் இன்று கூடவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட 9 பேரைக் கொண்ட நடவடிக்கைக் குழு தெரிவித்த சிபார்சுகளின் மிகுதியை ஆராயவே மீண்டும் கட்சி மத்திய குழு இன்று கூடுகிறது.

## புலிகளுக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டுள்ள யோசனைகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எதுவித தொடர்புமில்லை'' என்று விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். (வி)

# மேல் மாகாணத்தில் வசிக்கும் வெளியாரின் விபரங்களை சமர்ப்பிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் வசிக்கும் பிரதான குடியிருப்பாளர்கள், தமது இல்லங்களில் வசிக்கும் வெளியார் பற்றிய பிந்திய விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

மேல் மாகாணத்தில், குறிப்பாகத் தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பூரணமாகச் செயற்படுத்தவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மர்மப் பொருளைப் பரீட்சித்த இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அநாதரவாகக் காணப்பட்ட நீளமான கறுப்பு நிற மர்மப் பொருளை கல்லினால் குத்திப் பரீட்சித்துப் பார்க்க முற்பட்டபோது அது வெடித்து காயமடைந்த இருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பெரியவிழான் இளவாலையைச் சேர்ந்த சண்முகராசா சுதன் [வயது 14] என்பவர் வலது கையுண்டிக்கப்பட்ட நிலையிலும் நன்னித்தம்பி சிவசுதன் [வயது 22] என்பவர் காயங்களுடனும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56-க)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் கருத்தரங்குத் தொடரில் ''யப்பானிய சமூக பண்பாட்டமைப்பு'' என்ற தலைப்பில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் இன்று கைலாசபதி கலையரங்கில் உரையாற்றவுள்ளார்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநப் போட்டி இன்று புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. வை. குணசேகரம் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# ஊர்காவலரிடமிருந்து தன்னியக்க துப்பாக்கிகளை பெறுமாறு உத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊர்காவல் படையினரிடமிருந்து தன்னியக்க துப்பாக்கிகளை உடனடியாகத் திரும்பப்பெறுமாறு மட்டு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சில பகுதிகளில் இவர்கள் வாகனச்சோதனைகளை செய்வதனையும் நிறுத்துமாறும், காவலரண்களில் இவர்களை நிறுத்தாது பின்பகுதிகளுக்கு அனுப்புமாறும் அவ்வுத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற் படையினரின் அட்டூழியங்கள் குறித்து பல புகார்கள் தெரிவிக்கப்பட்டதையடுத்தே இந்நடவடிக்கை எனவும் தெரியவருகிறது. (சி)

## கூட்டணி சாட்சியம்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் கடந்த வியாழக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணி சாட்சியமளித்தது. இதன்போது சுயாட்சி குறித்தும், வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்தும் வலியுறுத்தியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

# இரு இந்திய கட்சிகள் பிளவுபடும் சாத்தியம்

(புதுடில்லி)

ஜனதாதள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் நேற்று முன்தினம் அரசுக்கு எதிராக லாக்களிக்க வரவில்லை இந்த எம். பி.க்கள்மீது ஜனதா தளம் நடவடிககை எடுக்கும் பட்சத்தில் ஏற்கனவே பிளவுபட்டிருக்கும் ஜனதாதளம் மேலும் உடையக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

மேலும் தெலுங்கு தேசம் கட்சியைச்சேர்ந்த 13 எம்.பிக்களில் 9 பேர் நேற்று முன்தினம் நாடாளுமன்றம் வரவில்லையென்பதால் தெலுங்கு தேசக்கட்சியும் பிளவுபடலாம் என்றும் கூறப்படுகிறது. (மா)

## அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டின் அரசு எதனை கூறுகிறதோ அதனையே செய்வோம். இராணுவ காரணங்களை முன்னிட்டு யாழ். குடா மீதான தாக்குதல் பற்றி எதனையும் கூற முடியாது என்றும் குறிப்பிட்டார். (சி)

## மரண அறிவித்தல்

### விஞசித்தம்பி நடராசா

தெல்லிப்பழை பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொம்பனித்தெரு கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான விஞசித்தம்பி நடராசா 9-3-92ல் காலமானார். அன்னார், காலஞ்சென்ற திருமதி செல்வநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (மலேசியா), சரவணமுத்து (கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), திருமதி தெய்வானைப்பிள்ளை, திருமதி வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலயோகேஸ்வரி, தனபாலன் (Project Manager, C. E. [illegible]., கொழும்பு), சிவபாலன் (அவுஸ்திரேலியா), பாலசிவனேஸ்வரி (ஆசிரியை, யா/சன்மார்க்க மகா வித்யாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா (விரிவுரையாளர், யா/தொழில் நுட்பக் கல்லூரி), ஜெயகுமாரி, ஸ்ரீராகினி, மனோகரன் (ஆசிரியர் யா/மத்தியகல்லூரி) ஆகியோரின் மாமனாரும், வயிரவப்பிள்ளை, திருநாவுக்கரசு, காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, கந்தையா ஆகியோரின் மைத்துனரும், முகுந்தன், வைகுந்தன், நிதர்ஷனி, கலாபன், இலட்சிகா, மகிழ்யா, நவீன், வாகினி, பிரியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 11-3-92ந் திகதி இன்று புதன்கிழமை காலை 11-00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைகளுக்காக அளவெட்டி கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

'பாலகிரி',
பன்னாலை,
தெல்லிப்பளை.

ந. நடராசா, த. மனோகரன்
மருமக்கள்.

(சி 6054)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பணிமனையில் இன்று பி. ப. 4 மணிக்கு திரு. க. சொக்கலிங்கம் ''எனது ஆசிரியர் அதிபர்-எழுத்துலக அனுபவம்'' என்னும் பொருள்பற்றிக் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

## எதிர்க் கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிகாரிகளும் இடம் பெறுவர்.

இதன்பின் மட்டக்களப்பு செயலகத்தில் அரச அதிபர் திரு. மௌனகுருசாமியையும் சந்திக்கவுள்ளனர். (சி)

## பூநகரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன, ரி. 56 ரக துப்பாக்கி-01, ரவைக்கூடுகள்-04, நடுத்தர ரவைகள்-110 உட்பட கொல்லப்பட்ட சிப்பாயின் சடலமும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

பூநகரி மட்டுவில்நாடு இராணுவ காவலரணிலிருந்து சுமார் 300 யார் தொலைவிலேயே மேற்படி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (க)

## மூன்று தமிழர்கள்

(1-ம பக்கத்தொடர்ச்சி)

மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடாத்தியதில் இவர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் சடலங்களை இராணுவத்தினர் தம்முடன் கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மல்லிகைத் தீவைச் சேர்ந்த காளியப்பு சௌந்தரராஜன் [வயது 35]], பேரின்பராசா ரவி [வயது 25], சுட்டியான் ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவார். (க)

# யாழ். தபாலகத்திலே தீவுப்பகுதி கடிதங்கள் ஒப்படைக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளிலுள்ள உறவினர்களுக்கு யாழ். நகரிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள், யாழ்ப்பாண பிரதம தபால் நிலையத்திலே ஒப்படைக்கப்படவேண்டும், இக்கடிதங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொதுமக்களிடமிருந்து நேரடியாகப் பொறுப்பேற்கமாட்டாது''

இவ்வாறு யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு. ச. சடாட்சரநாதன் தெரிவித்தார்.

காரைநகர் பகுதிக்கு அனுப்பப்படும் கடிதங்களின் மேல் உறையில், ''அஞ்சல் பெட்டி எண்-6 அநுராதபுரம் என்றும், ஊர்காவற்றுறைப் பகுதிக்கு அனுப்பபடும் கடிதங்களுக்கு ''அஞ்சல்பெட்டி எண்-7 அநுராதபுரம்'' என்றும் குறிப்பிடப்படவேண்டும். ஆனால் இக்கடிதங்கள் எக்காரணம் கொண்டும், அநுராதபுரத்துக்கு அனுப்பப்படமாட்டாது.

நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கு அனுப்பபடும் கடிதங்கள் வழமைபோல் முகவரியிடப்படலாம்.

மேற்படி பகுதிகளுக்கு மாதம் இருமுறை தபால் சேவைகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக நடாத்துவதற்கு தற்போது, புதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திரு. சடாட்சரநாதன் மேலும் தெரிவித்தார். (வி)

## கிறிஸ்தவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உப-தலைவர்), வண. டுலிப் சிக்கேரா (அங்கிலிக்கன்) ஆகியோர் அடங்கிய குழுவினரே இன்று யாழ். நகர் வரவுள்ளனர்.

இம்மாதம் 16ம் திகதி வரை யாழ். நகரில் தங்கியிருக்கும் இக்குழுவினர், 15ம் திகதி, விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சுக்களை நடத்துவதுடன், யாழ். மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிடவுள்ளனர்.

இதேவேளை மற்றுமொரு கத்தோலிக்கத் தூதுக்குழு கடந்த இருநாட்களாக யாழ். நகரில் தங்கியிருந்து விடுதலைப் புலி பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடாத்திவிட்டு நேற்று கொழும்புக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில்யாழ். நகருக்கு வந்து திரும்பிய கத்தோலிக்க திருச்சபை குழுவின் தலைவர் வண. அலெக்ஸ்சாண்டர் தலைமையிலேயே மூவர் அடங்கிய குழுவினர் யாழ். நகர் வந்து திரும்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (வி)

## காங்கேசனிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை துறைமுகத்தில், 2, 400 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் நீண்டநாட்களாகத் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றை உடனடியாக தாம் இங்கு கொண்டு வந்து விநியோகிக்க வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## தெரிவுக் குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்கள், தனிநபர்கள் ஆகியோர் பல சமாதான திட்டங்கள், பரிந்துரைகளை முன் வைத்துள்ளனர்.

ஐ.தே.கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், விடுதலைப் புலிகளும் தமது திட்டங்களை இதுவரை தெரிவுக் குழு முன்பாக சமர்ப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.